**முதன்மை மாவட்ட உரிமையியல் நீதிமன்றம், குளித்தலை**

**முன்னிலை:– திருமதி.R.தமிழரசி, B.A.,B.L.,**

**முதன்மை மாவட்ட உரிமையியல் நீதிபதி, குளித்தலை,**

**2025 ஆம் ஆண்டு செப்டம்பர் திங்கள் 17 ம் நாள் புதன்கிழமை**

**I.A.No.05/2025 in O.S.No.91/2022**

1. தியாகராஜன்
2. நாகமணி ... மனுதாரர்கள்/பிரதிவாதிகள்

**//எதிராக//**

ஜோதிமணி ... எதிர்மனுதாரர்/வாதி

இம்மனு என் முன்பாக 11.09.2025 ஆம் தேதி இறுதியாக விசாரணைக்கு வந்த போது மனுதாரர்கள் தரப்பில் வழக்கறிஞர் திரு.K.மாரியப்பன் அவர்கள் முன்னிலையாகியும், எதிர்மனுதாரர்/வாதி தரப்பில் அரசு வழக்கறிஞர் திரு.KSM.சாகுல் ஹமீது அவர்கள் முன்னிலையாகியும், எடுத்துரைத்த வாதங்களை கேட்டும், வழக்கு ஆவணங்களை பரிசீலனை செய்தும் இன்று இந்நீதிமன்றம் பிறப்பிக்கும்

**உத்தரவு**

கூடுதல் எதிர் வழக்குரை தாக்கல் செய்ய அனுமதிக்கக் கோரி உரிமையியல் நடைமுறைச்சட்டம் கட்டளை 8 விதி 9–ன் கீழ் இம்மனு தாக்கல் செய்யப்பட்டுள்ளது.

**மனுதாரர் தரப்பு மனுவின் சுருக்கம்**

1) மனுதாரர்கள் இவ்வழக்கின் பிரதிவாதிகள். தாவா சொத்து பாட்டன், பூட்டன், மூதாதையர்கள் சொத்துக்கள் ஆகும். தாவா சொத்து முருகனின் சுய சம்பாத்திய சொத்துக்களோ, ராசம்மாளின் சுய சம்பாத்திய சொத்துக்களோ இல்லை. ராசம்மாள் தாவா சொத்தை உயில் எழுத எவ்வித உரிமையும் இல்லை. அவர் தனது பாகத்தை பொறுத்து மட்டுமே வில்லங்கம் செய்ய உரிமை உண்டு. இவ்வழக்கில் ராசம்மாள் 16.04.2008 அன்று ஆவண எண்.25/2008 ஆக ஒரு உயில் ஆவணத்தை பதிவு செய்துள்ளார். அது செல்லத்தக்கதல்ல. மேற்படி உயில் ஆவணம் நடைமுறைப்படுத்தப்படவில்லை. தாவா சொத்து அனைத்தும் கூட்டு சொத்தாகும். 1ம் பிரதிவாதியின் தந்தை தங்கையன் (எ) பாலசுப்பிரமணி பெயரில் இருந்து தற்போது வரை பிரதிவாதிகள் அனுபவம் செய்து வருகின்றனர். மேற்படி சொத்து குறித்து பாகப்பிரிவினை எதுவும் நடைபெறவில்லை. வாதி ராசம்மாளின் ஈமச்சடங்கில் கலந்து கொண்டு பணம் கொடுத்ததாக தனது குறுக்கு விசாரணையில் ஒப்புக்கொண்டுள்ளார். அது குறித்து பிரதிவாதிகள்

தரப்பில் கூடுதல் எதிர் வழக்குரை தாக்கல் செய்து எதிரிடை பரிகாரம் கேட்க வேண்டிய சூழல் ஏற்பட்டுள்ளது. எனவே இம்மனுவுடன் தாக்கல் செய்துள்ள கூடுதல் எதிர் வழக்குரையை அனுமதிக்கக்கோரி மனு தாக்கல் செய்யப்பட்டுள்ளது.

**<u>எதிர்மனுதாரர் தரப்பில் தாக்கல் செய்துள்ள எதிருரையின் சுருக்கம்</u>**

2) மனுதாரர் 1 முதல் 6 பத்திகளில் சொல்லியுள்ள சங்கதிகளை மனுதாரர்களே நிரூபிக்க வேண்டும். 16.04.2008ம் தேதியிட்ட உயில் ஆவணத்தின்படி வாதிகள் தற்போது வரை தாவா சொத்தின் சுவாதீனத்திலும், அனுபவத்திலும் இருந்து வருகின்றனர். இவ்வழக்கை காலதாமதப்படுத்த வேண்டுமென்ற கெட்ட எண்ணத்திலேயே விசாரணை தொடங்கப்பட்ட பின்னிட்டு வழக்கை திசை திருப்ப இம்மனுவை தாக்கல் செய்துள்ளார். எனவே இம்மனுவை தள்ளுபடி செய்ய வேண்டுமென்று எதிருரை தாக்கல் செய்துள்ளார்.

3) தற்போது தீர்மானம் செய்யப்பட வேண்டியது இம்மனு அனுமதிக்கப்படத்தக்கதா? இல்லையா? என்பதே ஆகும்.

**<u>தீர்வு</u>**

4) இருதரப்பு வாதமும் கேட்கப்பட்டது. மனுதாரர் தரப்பில் இம்மனுவுடன் தாக்கல் செய்துள்ள கூடுதல் எதிர் வழக்குரையை அனுமதிக்கக்கோரி வாதிடப்பட்டது. எதிர்மனுதாரர் தரப்பில் வழக்கு விசாரணை தொடங்கப்பட்டு விட்ட நிலையில் இம்மனுவை அனுமதிக்கத்தக்கதல்ல என வாதிடப்பட்டது. வழக்கு கோப்புகளை பரிசீலனை செய்ததில் மனுதாரர்கள் தங்களது கூடுதல் எதிர் வழக்குரையுடன் எதிரிடை கோரி இம்மனுவை தாக்கல் செய்துள்ளார். தரப்பினர்கள் தங்களுக்குரிய பரிகாரங்களை முறையாக வேண்டி பெற அவர்களுக்கு உரிமை உள்ளது. தங்களது சொத்து குறித்து பிரதிவாதிகள் விளம்புகை பரிகாரம் கோரி தங்களது எதிரிடை கோரிக்கை மனுவை தாக்கல் செய்துள்ளார். மேற்படி மனுவை அனுமதிப்பதால் எதிர்மனுதாரருக்கு எவ்வித இழப்பும் ஏற்படாது என இந்நீதிமன்றம் கருதுகிறது. வழக்கு விசாரணை தொடங்கப்பட்ட பின்னிட்டு பிரதிவாதிகள் எதிரிடை கோரிக்கையுடன் தாக்கல் செய்துள்ளது அனுமதிக்கத்தக்கதல்ல என எதிர்மனுதாரர்கள் தரப்பில் வாதிடப்பட்டுள்ளது. எனவே இம்மனு நிபந்தனையின் பேரில் அனுமதிக்க இந்நீதிமன்றம் முடிவு செய்கிறது.

**முடிவாக,**

இம்மனு நிபந்தனையின் பேரில் அனுமதிக்கப்பட்டு மனுதாரர்கள் எதிர்மனுதாரருக்கு ரூ.1000/- செலவுத்தொகையாக 24.09.2025ம் தேதிக்குள்

செலுத்த வேண்டுமென்றும், தவறும் பட்சத்தில் இம்மனு தள்ளுபடியாகும் என உத்தரவிடப்படுகிறது. மீண்டும் அழைக்க 25.09.2025.

இவ்வுத்தரவானது என்னால் சுருக்கெழுத்து தட்டச்சருக்கு நேரடியாக சொல்லப்பட்டு, அவரால் குறிப்பெடுக்கப்பட்டு, கணினியில் தட்டச்சு செய்யப்பட்டு என்னால் படித்து சரிபார்க்கப்பட்டு பிழைகள் திருத்தம் செய்யப்பட்டு இன்று 2025-ம் ஆண்டு செப்டம்பர் திங்கள் 17 ம் நாள் அவையறிய பகரப்பட்டது.

R TAMILARASI Digitally signed by R TAMILARASI

**முதன்மை மாவட்ட உரிமையியல் நீதிபதி,**
**குளித்தலை.**

**<u>மனுதாரர்கள் தரப்பு சாட்சி மற்றும் சான்றாவணங்கள்</u>**

-இல்லை-

**<u>எதிர்மனுதாரர் தரப்பு சாட்சி மற்றும் சான்றாவணங்கள்</u>**

-இல்லை-

R TAMILARASI Digitally signed by R TAMILARASI

**முதன்மை மாவட்ட உரிமையியல் நீதிபதி,**
**குளித்தலை.**

*********************************
**முதன்மை மாவட்ட உரிமையியல் நீதிமன்றம்**
**குளித்தலை**

**I.A.No. 05/2025 in O.S.No. 91/2022**

**DRAFT / FAIR ORDER**

**D.D.17.09.2025**
*********************************